# தலை நகரில் தலைகீழ் மாற்றம்

## ”ஆம் ஆத்மி”- 67

## பாஜக - 3

## காங்கிரஸ் - 0

டெல்லியில் நடைபெற்ற தேர்தலில் வரலாற்று சிறப்பு மிக்க முடிவுகள் வெளியாகி உள்ளது. வளர்ச்சியின் நாயகன் என்று தன்னைத் தானே சொல்லிக் கொண்டுள்ளவரை டெல்லி மக்கள் ஒட்டு மொத்தமாக நிராகரித்து விட்டனர். எட்டு மாத மோடியின் ஆட்சியை அருகில் இருந்து பார்த்த மக்கள் அவரின் சுயரூபத்தை உணர்ந்து கடந்த தேர்தலில் பெரிய கட்சியாக இருந்த பாரதீய ஜனதா கட்சியை ஒற்றை இலக்கத்திற்கு தள்ளி விட்டனர். மக்களை பாதிக்கும் புதிய பொருளாதார கொள்கைகளை அமுல் படுத்த தயங்காத காங்கிரஸ் கட்சிக்கு பூஜ்யத்தை பரிசாக வழங்கி உள்ளனர். புதிய பொருளாதார கொள்கைகளை அமுலாக்கும் காங்கிரஸ் மற்றும் பாரதீய ஜனதா கட்சிக்கு மாற்றாக ஒரு கட்சி உருவாகும் என்றால் அதனை ஆதரிக்க இந்திய மக்கள் தயங்க மாட்டார்கள் என்பதே டெல்லி தேர்தல் முடிவுகள் தெரிவிக்கும் பாடம். அபார வெற்றி பெற்றுள்ள திரு அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் அவரின் ஆம் ஆத்மி கட்சிக்கு தமிழ் மாநில BSNL ஊழியர் சங்கம் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது. ஆம் ஆத்மி மக்களை பாதிக்கும் பொருளாதார கொள்கைகளை தவிர்த்து மக்களுக்கான ஆட்சியை நடத்த வேண்டும் என விரும்புகிறது.

**காவி சாயம் கலைந்து போச்சு டும் டும் டும்.**

**காங்கிரஸ் கட்சி தொலைஞ்சு போச்சு டும் டும் டும்.**